# The low attainment level of the History subject at the G.C.E. (O/L) Examination and its background (A study based on 1C schools in the Eravur Pattu Division of the Batticaloa Education Zone)

Ms.Gowry Punniyamoorthy, Lecturer (Prob), Department of History, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka

**Research Abstract**

Education is the most important device formulated by man to make himself perfect. At a time when history is forgotten and denied, it becomes necessary for everyone to discover and learn their history. It is the school education system that should serve as a motivation to initiate such concerns in history in everyone. However, awareness on the subject of history, in respect of Batticaloa, is found to be very rare.

In this context, this study is undertaken to find the attainment level of the subject of history in the 1C schools in the Eravur Pattu Division, identify the causes and recommend solutions.

Various problems influence student learning and affect the attainment level. This study aims at raising the attainment level by finding the problems and recommending solutions. Four 1C schools from the Eravur Pattu Division were selected on the basis of random selection.

When the attainment level of history subject is compared to that of other subjects, it has been found to be low. Subject-related ambiguity, teaching methods, qualification of teachers, students' environment, the mindset that the subject of history is difficult, lack of supervision, etc.  are found to be the causes.

The attainment level can be raised by appointing trained teachers, conducting extra practice classes for students, using novel teaching methodology, providing sufficient training to teachers, introducing techniques in teaching and developing the use of supplementary materials.

Key words: attainment, history subject, improvement of attainment level.

## க.பொ.த (சா/த)ப் பரீட்சையில் வரலாறு பாட அடைவு மட்ட வீழ்ச்சியும் பின்னணியும் (மட்டக்களப்பு கல்வி வலயத்தின் ஏறாவூர் பற்று கோட்டத்திற்குட்பட்ட 1C பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

## 1.0 ஆய்வு அறிமுகம்:

இன்றைய கல்வி உலகில் அறிவியல் சிந்தனைகள் நாளுக்கு நாள் பெருகிவருகின்றன. இவ்வாறான நிலையில் பரந்தும் விரிந்தும் வியாபித்தும் வருகின்ற அறிவைப் பெறும் வாயில்களில் பிரதானமானது கல்வியாகும். மனிதன் தன்னை நிறை மனிதனாக உருவாக்கிக் கொள்ளும் சாதனங்களுள் கல்வி முதன்மையானது. சமூகங்களின் வரலாறுகள் மறைக்கப்பட்டும் மறுக்கப்பட்டும் வரும் இன்றைய சூழலில் ஒவ்வொருவரும் தமது வரலாற்றைக் கண்டறிய வேண்டிய தேவை உள்ளது. காலம் நவீனத்துவத்தை நோக்கி நகர்கின்ற போதிலும் ஒவ்வொரு தேசத்து மக்களும் தங்களுக்கென்றுள்ள தனித்துவமான வரலாற்றைத் தேடிய பயணத்தை தொடர்ந்து கொண்டேயுள்ளனர். இதன் மூலமாகவே சமூகத்தின் பலதரப்பட்டவர்களுக்கும் வரலாறு கொண்டு செல்லப்படும். இந்த வரலாற்றுணர்வு இத்தேசத்து பூர்வீக மக்கள் நாம் என்று பெருமையுடன் கூற ஏதுவாக அமையும்.

"வரலாறென்பது செத்துப்போன காலத்தின் புதைகுழிக்குள் உக்கிப்போன எலும்புகளைத் தேடுவதல்ல. கடந்துபோன நிகழ்வுகளை காலவரிசையில் நிரைப்படுத்திவிடுவதும் வரலாறாகிவிடாது. வரலாறு என்பது மனித சமூக வாழ்வியக்கம் பற்றியது. அந்த அசைவியக்கத்திற்கும் மாற்றத்திற்கும் உந்தியல்பான தன்மைகன், சக்திகள், விதிகள் பற்றியது."[1] இத்தகைய வரலாற்றுணர்வு அனைவர் மத்தியிலும் ஏற்படுவதற்குத் தூண்டுதலாக அமைய வேண்டியது பாடசாலைக் கல்வித் திட்டமாகும். இந்நிலையில் மட்டக்களப்பைப் பொறுத்தவரையில் வரலாறு பாடம் தொடர்பான விழிப்புணர்வு இன்றியமையாததாகும்.

அண்மைக்கால கல்வியியல் ஆய்வுகளில் கல்வி அடைவு மட்டம் மற்றும் கல்வி தொடர்பான தேர்ச்சியில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. எந்தவொரு ஒழுங்கமைப்பினதும் முக்கியநோக்கு அடைவுமட்டமாகும். பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளின் வெளியீடு அதன் அடைவு மட்டமாகும். இது பாடசாலையின் வெற்றிகரமான இயக்கத்தையும் பாடசாலை வினைத்திறனையும் வெளிப்படுத்தி உறுதிசெய்து சான்றுபடுத்துகின்ற பிரதான குறிகாட்டியாக அமைகின்றது. அந்தவகையில் வரலாறு பாட அடைவு மட்டம் ஆய்விற்குட்படுத்தப்பட வேண்டியது அவசியமாக உள்ளது.

பாடசாலைக் கல்வியில் வரலாறு 2009 ஆம் ஆண்டு தொடக்கம், தரம் -6 முதல் தரம் -11 வரையான இடைநிலைக் கல்வித் திட்டத்தில் கட்டாயப்பாடமாக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்னர் "சமூகக்கல்வியும் வரலாறும்" எனும் கட்டாயப் பாடமாகவும், வரலாறு விருப்பத்திற்குரிய தெரிவுப் பாடமாகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமின்றி உயர்தரத்தில் கலைப்பிரிவில் ஒரு பாடமாகவும் வரலாறு காணப்படுகின்றது. மதிப்பிற்குரிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் அண்மைய பேச்சொன்றில்(02.05.2014) தமிழ், சிங்கள மொழிகளுடன் வரலாறு பாடமும் முறையாக சிறு பராயம் முதல் மாணவர்களுக்கு கற்பிக்கப்பட வேண்டும் என குறிப்பிட்டிருந்தமை சிறப்பானது. எனவே இப்பாடமும் அது தொடர்பான ஆய்வும் அவசியமானதாகும். அந்தவகையில் எமது சமூகத்தில் வரலாறு பாடத்தின் நிலை எத்தகையாதாகவுள்ளது என்பதைக் கண்டறிய வேண்டியது காலத்தின் தேவையாகும். அந்நிலையைக் கண்டறிந்து, அதற்கான காரணங்களை இனங்காண்பதோடு, அவற்றை நிவர்த்தி செய்வதற்கான விதப்புரைகளை முன்வைப்பதாகவும் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 2.0 ஆய்வுப் பின்னணியும் நியாயமும்

ஆய்விற்காகத் தெரிவுசெய்யப்பட்ட இப்பிரதேச பாடசாலைகளில் உயர்தரத்தில் கலைப்பிரிவு நீண்ட காலமாகக் காணப்படுகின்ற போதிலும் உயர்தரத்தில் வரலாறு பாடம் கற்பிக்கப்படாமை குறிப்பிடத்தக்கது. அதற்கான காரணங்களைக் கண்டறிவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் க.பொ.த (சா/த) பரீட்சையில் வரலாறு பாடத்தின் பெறுபேறு அதிக தாக்கம் செலுத்துகின்றமை கண்டறியப்பட்டது. இவர்களின் குடும்பப் பொருளாதார நிலை, கல்வி அறிவீனம், பிரதேச சூழ்நிலை போன்ற காரணங்களுக்கிடையில் கற்றலுக்கு கொடுக்கும் முக்கியத்துவம் குறைவாகவே காணப்படுகின்றது. தற்போது இந்நிலையில் வளர்ச்சி காணப்படுகின்றபோதிலும் க.பொ.த (சா/த) தின் ஏனைய பிரதான

---

[1] கிருஷ்ணராசா.செ. (2005),இலங்கை வரலாறு, பிறை நிலா வெளியீடு, பக்:13

பாடங்களின் பெறுபேறுகளை விட வரலாறு பாடத்தின் அடைவு மட்டம் குறைவாகவே காணப்படுகின்றது.

ஆரம்பநிலை வரலாறு பின்னையதற்கு அடிப்படையாகவும் அத்திவாரமாகவும் அமைகின்றமையால் அது பலமாக இருக்க வேண்டும். ஆனால் அடித்தளம் சரியான முறையில் இடப்படுகின்றதா என்பது கேள்விக்குறி. இந்த கல்விக்கோட்டத்திற்குட்பட்ட 1C பாடசாலைகளில் க.பொ.த (சா/த) பரீட்சை அடைவு மட்டத்தில் வரலாறு பாடத்தின் 4 வருட கால பெறுபேற்றினை நோக்கும்போது மாணவர்களின் குறைவான அடைவு மட்டத்தை கோடிட்டுக் காட்டுகின்றது. அதாவது அதிவிசேட, விசேட, திறமைச் சித்திகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்களின் தொகை மிகக்குறைவாகவே காணப்படுகின்றது. இந்நிலை தொடர்கின்றமையால் அவற்றுக்கான காரணங்களைக் கண்டறிந்து நிவர்த்தி செய்வதன் ஊடாக அடைவு மட்டத்தை விருத்தி செய்யலாம் என்ற பின்னணியில், வரலாறு பாடக் கற்றலில் ஓர் உன்னத நிலையை அடையச் செய்யும் வகையில் இக்கருப்பொருள் ஆய்விற்குட்படுத்தப்படுகின்றது.

மட்டக்களப்பு கல்வி வலயத்தின் பாடசாலைகளின் தர ரீதியான விபரம்:

| இல | தரம் | பாடசாலைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 1 AB | 08 |
| 2. | 1C | 13 |
| 3. | TYPE II | 29 |
| 4. | TYPE III | 27 |

அட்டவணை -01 மூலம்: வலயக் கல்வி அலுவலகம், மட்டக்களப்பு

**3.0 ஆய்வின் நோக்கங்கள்:**

தற்போதைய கல்வித் திட்டத்தின்படி தரம் - 6 முதல் தரம் -11 வரையான இடைநிலை வகுப்புகளுக்கு கடந்த ஐந்து வருடங்களாக வரலாறு கட்டாயப் பாடமாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் மாணவர்களது கற்றலில் பல பிரச்சினைகள் தாக்கம் செலுத்தி அவை அடைவு மட்டத்தைப் பாதிக்கின்றது. இதனைக் கருத்திற்கொண்டு மட்டக்களப்பு கல்வி வலயத்தின் ஏறாவூர் பற்று கோட்டத்திற்குட்பட்ட 1C பாடசாலைகளில் வரலாறு அடைவு நிலையைக் கண்டறிந்து, அதற்கான காரணங்களை இனங்காண்பதன் ஊடாக, சரியான தீர்வினை முன்வைத்து இப்பிரதேச பாடசாலைகளின் அடைவு மட்டத்தை மேம்படுத்துவது இவ்வாய்வின் நோக்கமாகும்.

### *3.1 உபநோக்கங்கள்*

3.1.1 தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் க.பொ.த (சா/த) பரீட்சையில் வரலாறு பாட அடைவு மட்டத்தின் போக்கு எவ்வாறுள்ளது என்பதைக் கண்டறிதல்.
3.1.2 அடைவு மட்டத்தின் நிலைக்கு என்ன காரணம் என்பதைக் கண்டறிதல் (பிரச்சினையை இனங்காணல்)
3.1.3 வரலாறு பாடத்தில் போதியளவு சித்தியைப் பெறுவதில் மாணவர்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகளை அறிதல்.
3.1.4 பாட அடைவு மட்டத்தை உயர்த்தும் பொருட்டு ஆசிரியர், மாணவர், பெற்றோர், ஆசிரிய ஆலோசகர் ஆகியோர் மேற்கொள்கின்ற நடவடிக்கைகளை இனங்காணல்.
3.1.5 கற்பித்தல் முறைகளைக் கண்டறிதல்.
3.1.6 அடைவு மட்டத்தை மேம்படுத்துவதற்கான தீர்வாலோசனைகளை முன்வைத்தல்.
3.1.7 எதிர்காலத்தில் எமது சமூகங்களின் வரலாற்றை உண்மைத் தன்மையுடன் வெளிக் கொண்டுவரத்தக்க வரலாற்றாசிரியர்களை உருவாக்குதல்.

**4.0 ஆய்வுப் பிரச்சினை**

கல்வி தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகள் மாணவர்களுக்கு மட்டுமல்லாது மாணவர்கள் சார்ந்து நிற்கும் சமூகத்தையம் பாதிக்கின்றது. அந்தவகையில் மட்டக்களப்பு ஏறாவூர் பற்றுக் கோட்டப் பாடசாலைகளில் ஆய்விற்குத் தெரிவு செய்த நான்கு பாடசாலைகளிலும் வரலாறு பாட அடைவு மட்டம் தொடர்பாக மேல்வரும் பிரச்சினைகள் கண்டறியப்பட்டுள்ளன.

4.1 ஆய்விற்குட்படுத்திய பாடசாலை மாணவர்களிடையே வரலாறு பாடத்தில் விருப்பமின்மை காணப்படுகின்றது.
4.2 வரலாறு பாடத்தில் படவேலை, வரைபடம் குறித்தல் முதலான சில பகுதிகள் தொடர்பான அறிவு மிகக் குறைவாகக் காணப்படுகின்றது.
4.3 வரலாறு பாடத்தை சிறப்புப் பாடமாகவோ பட்டத்தில் ஒரு பாடமாகவோ கற்காத, குறித்த பாடத்தில் தேர்ச்சி பெறாத ஆசிரியர்கள் கற்பிக்கின்றமையால் மாணவர்கள் சிறந்த முறையில் வரலாறு பாடத்தை விளங்கிக் கொள்வதில் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.
4.4 வரலாறு பாடம் கற்பிக்கின்ற போது ஆசிரியர்கள் நவீன கற்பித்தல் முறைகளையோ உபகரணங்களையோ பயன்படுத்தாமை.
4.5 மாணவர்கள் இலகுவாக விளங்கிக் கொள்ளத்தக்க வகையில் இலகுபடுத்தி கற்பித்தலை மேற்கொள்ளாமை.
4.6 மேலதிக வகுப்புக்கள் நடத்தப்படுகின்றமை மிகக்குறைவாகக் காணப்படுகின்றது.
4.7 கற்பித்தலின் போது பாடப்புத்தகங்களை மட்டும் நம்பியிருக்கும் நிலை காணப்படுகின்றது.
4.8 மாணவர்களின் அறிவு மட்டத்தை அறிந்து கொண்டு ஆசிரியர்கள் கற்பிக்காமை.
4.9 பாடஅலகுகள் உரிய காலத்தினுள் கற்பித்து முடிக்கப்படாமை.
4.10 ஆசிரியர்கள் வழங்குகின்ற குறிப்புகள் போதுமானதாகக் காணப்படாமை.
4.11 பாடம் சம்பந்தமான மேலதிக பயிற்சிகள் வழங்கப்படாமை.
4.12 மாணவர்களது பிழைகள் சுட்டிக்காட்டப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்படுதல் குறைவாகக் காணப்படுகின்றது.

## 5.0 ஆய்வு முறைமையியல்

ஆய்வு முறைமை சிறப்பாகக் காணப்படுமிடத்து தீர்வுகள் நம்பகத்தன்மையானதாகக் காணப்படும்.[2] ஆய்வு என்பது தொடர்ச்சியான தேடலை முன்னெடுக்கின்றது.[3]

### *5.1 அளவை நிலை ஆய்வு:*

தற்கால, நிகழ் கால உண்மை நிலைமைகளை ஆராய்ந்து சரியான தகவல்களை அளிக்கும் விமர்சன பரிசோதனை முறையே அளவை நிலை ஆய்வாகும். அந்தவகையில் மட்டக்களப்பு ஏறாவூர்பற்றுப் பாடசாலைகளில் க.பொ.த (சா/த) வரலாறு பாட அடைவு மட்ட வீழ்ச்சியும் அதன் பின்னணியும் எனும் இவ்வாய்வு குறுக்குவெட்டு ஆய்வு முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

### *5.2 மாதிரித் தெரிவு:*

மட்டக்களப்பு கல்வி வலயத்திலுள்ள ஏறாவூர் பற்றில் அமைந்துள்ள 1C பாடசாலைகள் நான்கு இவ்வாய்விற்கான பாடசாலைகளாக வசதி மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் தர ரீதியான விபரம்:

| இல | பாடசாலையின் பெயர் | தரம் | மாணவர் தொகை | ஆசிரியர் தொகை |
|---|---|---|---|---|
| 1. | தன்னாமுனை புனித வளனார் வித்தியாலயம் | 1C | 618 | 36 |
| 2. | மயிலம்பாவெளி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம் | 1C | 589 | 26 |
| 3. | குடியிருப்பு கலைமகள் வித்தியாலாயம் | 1C | 712 | 30 |
| 4. | ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலயம் | 1C | 526 | 27 |

அட்டவணை -02 மூலம்: வலயக் கல்வி அலுவலகம், மட்டக்களப்பு

அப்பாடசாலைகளில் க.பொ.த (சா/த) பரீட்சையில் வரலாறு பாட அடைவு மட்டத்தின் போக்கு எவ்வாறுள்ளது, அதில் தாக்கம் செலுத்தும் காரணிகள் என்பவற்றைக் கண்டறிவதற்காக ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் தரம்-10,11 ஆகிய வகுப்புகளிலிருந்து ஆண், பெண் உட்பட தலா 10 மாணவர்கள் மாதிரித் தெரிவாகத் தெரிவு செய்யப்பட்டு மொத்தமாக 40 மாணவர்கள் ஆய்விற்குட்படுத்தப்பட்டனர். ஆசிரியர்கள் துறை சார்ந்த அடிப்படையில் வரலாறு பாடம்

[2] அருள்மொழி.செ. (2008), கல்வி ஆய்வு முறைகள், எவர்கறீன் அச்சகம்

[3] சின்னத்தம்பி.க. (2007), கல்வி ஆய்வியல், ஜெயா இன்டர்நெஷல் (பி) லி, கொழும்பு

கற்பிக்கின்ற ஐந்து ஆசிரியர்களும், பாடசாலை அதிபர்கள் நால்வரும், இக்கோட்டத்திற்குரிய ஆசிரிய ஆலோசகர், பெற்றோர் என்போரும் ஆய்விற்குட்படுத்தப்பட்டனர்.


*5.3 தரவு சேகரித்தல் கருவிகள்*

மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர், ஆசிரிய ஆலோசகர் என்போரிடமிருந்து வினாக்கொத்து மூலம் தகவல்கள் பெறப்பட்டு எண் சதவீத அளவீட்டு முறையில் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளமையால் இதுவொரு அளவுசார் ஆய்வாகக் காணப்படுகின்றது. அத்துடன் இவர்களுடன் பெற்றோரிடமிருந்தும் அவதானம், நேர்காணல்கள் மூலம் பண்புசார் ரீதியில் தகவல்கள் பெறப்படுவதால் இதுவொரு பண்புசார் ஆய்வாகவும் அமைகின்றது. சேகரிக்கப்பட்ட தகவல்கள் யாவும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் க.பொ.த (சா/த) பரீட்சையில் வரலாறு பாட அடைவு மட்டத்தின் போக்கு எவ்வாறுள்ளது, இத்தகைய நிலைக்கு என்ன காரணம், வரலாறு பாடத்தில் போதியளவு சித்தியைப் பெறுவது தொடர்பாக மாணவர்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகள் என்ன, வரலாறு பாடக் கற்றல், கற்பித்தலுக்கு பொருத்தமான வளங்களின் நிலைப்பாடு, மாணவர்களது அடைவு மட்டத்தை அதிகரிக்கும் பொருட்டு சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், அதிபர், ஆசிரியர்கள், மற்றும் பெற்றோர்கள் மேற்கொள்கின்ற நடவடிக்கைகள் போன்ற விடயங்கள் ஆய்வு நோக்கத்தின் அடிப்படையில் பண்பு ரீதியாகவும் அளவு ரீதியாகவும் பகுப்பாய்வு செய்யப்பட்டு தீர்வு வழங்குவதாகவும் இவ்வாய்வு உள்ளது.

## 6.0 தரவுப் பகுப்பாய்வு

க.பொ.த (சாத) பரீட்சையில் வரலாறு பாட அடைவு மட்டத்தை அறிந்து கொள்வதற்காக கடந்த நான்கு வருடங்களாக க.பொ.த (சாத) பரீட்சைப் பெறுபேறுகள் ஆராயப்பட்டன. இதனடிப்படையில் வரலாறு பாடத்தின் அடைவு மட்டமானது ஏனைய பிரதான பாடங்களுடன் ஒப்பிடுகையில் மிக மோசமான நிலையில் உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

2009-2012 கால க.பொ.த (சா/த) வரலாறு பாட அடைவு மட்டம் (விகிதாசார அடிப்படையில்)




உரு 6.1 மூலம்: பாடசாலை தரவுப் பகுப்பாய்வு அறிக்கைகள்


இதன்படி ஆய்விற்குட்படுத்தப்பட்ட பாடசாலைகளில் க.பொ.த (சா/த) இல் கடந்த நான்கு வருடங்களாக வரலாறு பாடத்தில் பெறப்பட்ட அடைவு மிகத்தாழ் நிலையில் காணப்படுகின்றது. குறிப்பாக அதிவிசேட சித்தி, விசேட சித்தி, திறமைச் சித்தி என்பவை மிகக் குறைவான மாணவர்களாலேயே பெறப்பட்டுள்ளது. இதில் அதிவிசேட சித்தி(A) மற்றும் விசேட சித்தி(B) பெற்றவர்களின் வீதம் 2009 ஆம் ஆண்டு 0% ஆகவும், 2010 இல் 3%ஆகவும், 2011இல் 2%ஆகவும், 2012இல் 7% ஆகவும் காணப்படுகின்றது.

2009 ஆம் ஆண்டு 74%, 2010ஆம் ஆண்டு 27%, 2011ஆம் ஆண்டு 63%, 2012ஆம் ஆண்டு 47%மாணவர்களும் சித்தியடையத் தவறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் அதிகளவானவர்கள் சாதாரண சித்தியையே பெற்றுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

இப்பாடசாலைகளில் வரலாறு பாடம் கற்பிக்கும் எந்தவொரு ஆசிரியரும் வரலாறு பாடத்தை தனது பட்டப்படிப்பில் சிறப்புக் கற்கையாகவோ,பொதுக் கற்கையில் ஒரு பாடமாகவோ

கற்றிருக்கவில்லை. அத்துடன் இவர்களில் எவரேனும் இப்பாடத்திற்கென நியமிக்கப்பட்டவர்கள் அல்லர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வரலாறு பாடத்தில் ஆசிரியர்களின் தேர்ச்சி





உரு 6.2 மூலம்: கள ஆய்வு

ஆசிரியர்களில் 20% மட்டும் தமது வேறு பாட சிறப்புக் கற்கையின் போது முதலாம் வருடத்தில் மாத்திரம் வரலாறு பாடத்தை கற்றுள்ளனர்.ஏனைய 80% ஆசிரியர்களும் வரலாறு பாடத்தை தமது பாடத்திலோ தொழிற்தகைமையிலோ பூர்த்தி செய்யாதவர்களாகக் காணப்படுகின்றனர்.

கற்பித்தலுக்கான வளவசதிகளைப் பொறுத்தவரையில் மிகக்குறைவாகவே காணப்படுகின்றன. அது தொடர்பாக ஆசிரியர்கள், மாணவர்கள், அதிபர் ஆகியோர் குறிப்பிடுகின்றவிடத்து, வளவசதிகள் போதுமானதாகவுள்ளதா? என்ற வினா கேட்கப்பட்ட போது அவர்களால் வழங்கப்பட்ட பதில் மேல்வருமாறு அமைந்திருந்தது.

வளவசதிகளின் நிலை





உரு 6.3 மூலம்: கள ஆய்வு

மாணவர்களுக்கு வரைபடங்களை அடிப்படையாகக் கொண்டு கற்பிக்கின்ற வசதிகள் இல்லை. multimedia, இணையத்தளம் என்பவற்றின் பாவனை மிக மிக அரிதாகவே காணப்படுகின்றன.

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு மேலதிக அறிவு வழங்குகின்ற வீதம் குறைவாகவே காணப்படுகின்றது.

மேலதிக வகுப்புகள், கருத்தரங்குகள் என்பன நடைபெறுகின்ற வீதம்




உரு 6.4 மூலம்: கள ஆய்வு

பரீட்சைகளுக்கான தயார்படுத்தலாக மேலதிக வகுப்புகள் நடைபெறுகின்ற வீதம் 39%ஆகவும், மிகக்குறைவான அளவிலேயே நடைபெறுகின்றது என 61%ஆனவர்கள் குறிப்பிட்டனர்.

அத்துடன் மாணவர்களுக்கு முறையான பின்னூட்டல், முன்னூட்டல் நடத்தப்படுகின்ற வீதம் குறைவாகவே காணப்படுகின்றது.

வரலாறு பாடநூலில் காணப்படுகின்ற சில தெளிவற்றதன்மைகளும் பாட அடைவு மட்டத்தில் தாக்கம் செலுத்துகின்றது.

பாடநூலில் தெளிவற்றதன்மை காணப்படுகின்றமை




உரு 6.5 மூலம்: கள ஆய்வு

## 7.0 கண்டுபிடிப்புகள்

ஆய்விற்குட்படுத்திய பாடசாலைகளில் மாணவர்கள், ஆசிரியர்கள் வரலாறு பாடக் கற்றல், கற்பித்தலில் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

வரலாறு பாடத்தில் சிறப்புத் தேர்ச்சி பெறாத ஆசிரியர்கள் வரலாறு பாடத்தை கற்பிக்கின்றமையால் பாட நூலில் உள்ள விடயங்களுக்கு மேலதிகமாகவும் தெளிவாகவும் மாணவர்களுக்கு கற்பிக்க முடியாதுள்ளனர். குறிப்பாக பொருத்தமற்ற ஆசிரியர் தெரிவு இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

வரலாறு பாடம் தரம் -06 முதல் கற்பிக்கப்படுகின்றது. எனவே அடித்தளம் சரியான முறையில் இடப்படாவிட்டால் அது க.பொ.த (சா/த)இல் தாக்கத்தை செலுத்தும். இந்நிலையை இப்பாடசாலைகளில் அவதானிக்க முடிந்தது. ஆறாம், ஏழாம், எட்டாம் தரங்களில் சரியான அடித்தளம் இடப்படாமையால் 10ஆம், 11ஆம் தரங்களில் கற்பிக்கின்றபோது மாணவர்கள் சில சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். ஏனெனில் வரலாற்றைக் கற்றுக் கொள்வதற்கு ஒரு தொடர்ச்சியான அறிவு அவசியமாகும். அத்துடன் வரலாறு பாடநூல்கள் தரம்-6 இன் தொடர்ச்சியாகவும் விரிவாகவும் தரம் -10இலும், தரம்-9 இன் விரிவாக தரம்-11 இலும் அமையத்தக்கதாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஆரம்ப வரலாறு பற்றிய அறிவின்றி வருகின்ற மாணவர்களுக்கு அவை பற்றிய விளக்கத்தையும் வழங்க வேண்டியுள்ளமையானது ஆசிரியர்களுக்கு கால தாமதத்தை ஏற்படுத்துகின்றது.

கற்பித்தல் முறைகள் தனித்து விரிவுரை முறையாக மாத்திரம் காணப்படுமிடத்து மாணவர்கள் ஆர்வத்துடன் கற்க மாட்டார்கள். ஆனால் இப்பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்விலிருந்து அதிக ஆசிரியர்களால் இம்முறையை பினபற்றப்படுகின்றமை இனங்காணப்பட்டது. கற்பித்தலின் போது துணைச்சாதனங்களின் பயன்பாடு மிகக்குறைவாகவே காணப்படுகின்றது. அத்துடன் வினவுதல் முறை, குழு முறைக் கற்பித்தல் என்பன மிகக்குறைவாகவே காணப்படுகின்றன. பாடம் தொடர்பான மேலதிக தகவல்களையும் இணைத்து சுவாரசியமான முறையில் கற்பித்தல் நடைபெறாமை கண்டறியப்பட்டது. அதுமட்டுமின்றி பாட அலகுகள் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யப்படாத நிலையையும் காணமுடிந்தது. பாட நேரம் போதாமை ஆசிரியர்களால் குறைபாடாக முன்வைக்கப்பட்டது. அதனால் பாடம் தொடர்பான பயிற்சி வழங்குதலும் குறைவாகக் காணப்படுகின்றது.

கற்றலில் மாணவர்களில் மிகக் குறைவாகக் காணப்படுகின்றது. குடும்பச் சூழல் அதில் அதிக தாக்கம் செலுத்துகின்றது. இப்பிராந்தியம் பொதுவாக வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்கின்ற மக்கள் தொகையை அதிகளவில் கொண்டுள்ள பிரதேசம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வரலாறு பாடநூலில் அதிக எழுத்துப் பிழைகள் காணப்படுவதால் மாணவர்கள் புரிந்துகொள்வதில் சிக்கல் தன்மை காணப்படுகின்றது. பாடநூல்கள் பொதுவாக சிங்கள மொழியிலிருந்து மொழிபெயர்ப்புச் செய்யப்படுகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. சிங்கள மொழி மூல பாட நூலில் காணப்படும் தெளிவு தமிழ் மொழி மூல நூலில் காணப்படாமை வரலாற்றை வேறு இடங்களில் கற்காத தமிழ் ஆசிரியர்களுக்கு பாரிய சவாலாக அமைகின்றன. இலங்கை வரலாற்றைப் பொறுத்தவரையில் பாளி மொழி மூலமான வரலாற்று இலக்கியங்களை மூலாதாரமாகக் கொண்டு எழுதப்பட்ட வரலாற்றிற்கு முக்கியம் வழங்கி, அவை கூறுகின்றவற்றை முற்றுமுழுதும் உண்மை என்ற போக்கிலான கருத்துக்களை பாடநூலில் இணைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அவற்றில் பொதுவாக அனுராதபுர இராசதானியை மையமாகக் கொண்டு ஆட்சி செய்த சிங்கள மன்னர்கள், அவர்களது சேவைகள் என்பவற்றிற்கு வழங்குகின்ற முக்கியத்துவம் சமகாலத்தில் நாட்டின் ஏனைய பாகங்களான கொட்டியாரம், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் முதலான பகுதிகளில் நடைபெற்ற ஆட்சி, சமூகம், சமயம் முதலானவற்றிற்கு வழங்கப்படுவதில்லை. இது தமிழ் மொழி மூல மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியில் வரலாறு பாடம் மீதான ஆர்வமின்மையை தோற்றுவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வரலாறு பாடம் கடினமானது. நிறைய விடயங்களை மனனம் செய்ய வேண்டும் என்ற எண்ணப்பாடு மாணவர்கள் மத்தியில் அதிகளவில் காணப்படுகின்றது. அதன் காரணமாக வரலாறு பாடத்தைக் கற்பதில் மாணவர்கள் அலட்சியம் காட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலைகளில் விஞ்ஞானம், கணிதம் முதலான பாடங்களுக்கு கொடுக்கப்படுகின்ற முக்கியத்துவம் வரலாறு பாடத்திற்கு வழங்கப்படுவதில்லை. ஆசிரியர்களது பாடத்திட்டம், வேலைத்திட்டம் என்பவை சரியான முறையில் மேற்பார்வை செய்யப்படுவதில்லை.

## 8.0 தீர்வாலோசனைகள்

வரலாறு பாடத்தில் தேர்ச்சி பெற்ற பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டியது அவசியமாகவுள்ளது. இதனூடாக தாம் பெற்ற வரலாற்றறிவுடன் மேலதிக விடயங்களையும் மாணவர்களுக்கு வழங்கி சந்தேகமற்ற கல்வியை வழங்க முயும். இதனூடாகவே வரலாறு பாட அடைவு மட்டத்தை விருத்தி செய்யலாம்.

மாணவர்களுக்கு மேலதிக பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படல் அவசியமாகும். பாடசாலை அதிபர்கள் இதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். மாணவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு உடனுக்குடன் திருத்தப்படுவதுடன் ஊக்குவிப்பும் மீள் வலியுறுத்தலும் நடைபெற வேண்டும்.

நவீன வளவசதிகள் பாடசாலைகளுக்கு வழங்கப்படவேண்டும். தாம் கற்கும் விடயங்களை கண்களால் பார்க்கத்தக்கவகையிலான இணையத்தள வசதிகள், multimedia, உலக வரைபடங்கள் போன்றவற்றின் பாவனையை அதிகரிக்க வேண்டும். கலைத்திட்ட ஒழுங்கு விதிக்கமைய நவீன கற்பித்தல் முறைகளை பயன்படுத்த வேண்டும்.

ஆசிரியர்களுக்கு போதியளவு பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். ஏற்கனவே குறித்த பாடத்தில் தேர்ச்சி பெறாத ஆசிரியர்களுக்கு வாண்மை விருத்திக் கருத்தரங்குகள், பயிற்சிகளை வழங்குவதன் மூலம் அவர்களை தேர்ச்சி மிக்கவர்களாக மாற்றமுடியும். ஆசிரியர்கள் மத்தியில் காணப்படுகின்ற தெளிவற்ற விடயப்பரப்புகளைக் கண்டறிந்து அவற்றை நீக்குவதற்கு இது உந்துச்தியாக அமையும். இத்தகு நடவடிக்கைகளை வலயக் கல்வித் திணைக்களங்கள் முன்னெடுக்க வேண்டும். அவ்வாறில்லாதாவிடத்து அதிபர்கள் தனியார் நிறுவனங்கள் முதலானவற்றின் உதவியுடன் இவற்றை ஒழுங்கமைக்கலாம். இவற்றுடன் ஆசிரியர்களின் துறைசார்ந்த அறிவை விருத்தி செய்வதற்கு மேல்மட்டங்களில் உள்ளவர்கள் அவர்களை மேற்படிப்பை மேற்கொள்வதற்கான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் மேற்கொள்ள வேண்டும்.

ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள் நடத்துகின்ற போது பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பாடத்துறை சார்ந்த வளவாளர்கள் என்போரையும் இணைத்துக் கொண்டு திட்டமிட்டு

நடத்துதல் வேண்டும். அத்துடன் பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்டு பாடசாலை மாணவர்களுக்கு மேலதிக பயிற்சிகளை வழங்க முடியும்.

ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே சிறந்த தொடர்பாடலை ஏற்படுத்துதல் வேண்டும். பாடத்தில் ஆர்வமின்மைக்கான காரணங்களைக் கண்டறிந்து அதைத் தீர்க்கும் வகையில் ஆசிரியர்கள் கற்பித்தலில் ஈடுபடவேண்டும். மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளில் பெற்றோரின் பங்குபற்றலை அதிகரித்தல் அவசியமாகும். ஏனனில் மாணவர்களது அடைவு மட்டத்தில் குடும்பச் சூழல் பெரும் தாக்கத்தைச் செலுத்துகின்றது.

கற்பித்தலில் நுட்பங்களைக் கையாள்வதோடு துணைச்சாதனங்களின் பயன்பாட்டையும் விருத்தி செய்ய வேண்டும். கற்பித்தலில் வினவுதல் முறை, குழு முறைக் கற்பித்தல் என்பவற்றையும், வினாடி வினா, நாடகம் நடித்தல் முதலான செயற்பாடுகளையும் செய்யலாம். பாடம் தொடர்பான மேலதிக தகவல்களையும் இணைத்து சுவாரசியமான முறையில் கற்பித்தல் மேற்கொள்ளல் அவசியமாகும்.

மாணவர்களுக்குச் சில செயற்பாடுகளை வீட்டு வேலையாக வழங்குவதன் மூலம் பாட அலகுகளை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்து கொள்ள முடியும்.

குறிப்பாக மாணவர்களின் அடைவில் குடும்பச் சூழல் அதிகளவு தாக்கம் செலுத்துகின்றமையால் பெற்றோர் அதற்கான பொறுப்பை எடுத்துக்கொள்ள வேண்டும்.

**9.0 முடிவுரை**

கல்வி என்பது வாழ்க்கைக்கான முதலீடாகக் காணப்படும் வேளையில் ஆய்வுப் பிரதேசத்தில் வரலாறு கற்றல், கற்பித்தலில் பல்வேறு சவால்கள் காணப்படுகின்றன. அடைவு மட்டம் தாழ்நிலையில் காணப்படுகின்றது. அதேநேரம் உயர்தரத்திலும் இக்கோட்டத்திலுள்ள எந்தவொரு பாடசாலையிலும் வரலாறு பாடம் கற்பிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மாணவர்களை கவரத்தக்கவகையில் கற்பித்தல் நடைபெறாமை இவர்கள் மத்தியில் இப்பாடத்தில் ஆர்வமற்றதன்மை காணப்படுகின்றமைக்கான காரணமாக சுட்டிக்காட்டத்தக்கது. இவர்களது ஆர்வத்தை தூண்டும் வகையில் சிறப்பான கற்பித்தலை வழங்கவேண்டிய அதேநேரம் ஆசிரியர்களின் அறிவை விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட கோட்டக் கல்வி அதிகாரி, வலயக் கல்விப் பணிப்பாளர் என்போர் எடுப்பதன் மூலம் வரலாறு அடைவுமட்டத்தை விருத்தி செய்ய முடியும் என்பது திண்ணம்.

அத்துடன் மாணவர்களின் விருத்திக்கு பாடசாலையுடன் இணைந்து பெற்றோர், சமூகம் குறிப்பாக பழைய மாணவர்களும் பங்களிக்க வேண்டும். ஆசிரியர்களுக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்களைக் கொண்டு செயலமர்வுகள், விரிவுரைகள் என்பவற்றை வழங்குவதன் மூலம் இப்பிராந்தியத்தில் வரலாறு பாடத்தின் அடைவு மட்டத்தை விருத்தி செய்வதுடன் எமது சமூகம் சார்ந்த வரலாறு, நாட்டின் வரலாறு என்பவற்றை உண்மைத்தன்மையுடன் வெளிக்காண்டுவருவதற்கான எதிர்கால வரலாற்றாசிரியர்களின் உருவாக்கத்திற்கு துணையாக நிற்றல் அவசியமானதாகும்.

உசாத்துணை


1. அருள்மொழி.செ. (2008), கல்வி ஆய்வு முறைகள், எவர்கறீன் அச்சகம்
2. கிருஷ்ணராசா.செ. (2005),இலங்கை வரலாறு, பிறை நிலா வெளியீடு
3. சின்னத்தம்பி.க. (2007), கல்வி ஆய்வியல், ஜெயா இன்டர்நெஷனல் (பி)லிமிட், கொழும்பு